Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் ١٤ திருவள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை -02 18-11-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 273

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

செல் 077-6059672



## ஜே.வி.பி. யுடனான உடன்பாடு குறித்து சு.க.மத்திய குழுவில் கடும் விவாதம்

### 25ஆம் திகதிக்கு கூட்டணி ஏற்படுத்த நடவடிக்கை

ஜே.வி.பி.யுடனான கூட்டுக் குறித்து நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று இரவு நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறிய அநுராபண்டார நாயக்க மங்களசமரவீர உள்ளிட்ட குழுவினருக்கும் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்துக்கொள்ளக் கூடாது என்று கூறும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினருக்குமிடையே இந்த வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன இதன்போது மங்களசமரவீர உள்ளிட்ட 22 உறுப்பினர்கள் ஜே.வி.பி.யுடன்கூட்டணி அமைத்துக்கொள்வதற்குத் தாம் எந்தவிட்டுக்கொடுப்புக்களைச் செய்யவும் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜிநாமாச் செய்யக்கூடத்தயாராக இருப்பதாக சனாதிபதியிடம் கடிதம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யுடன் கூட்டணி இன்றேல் கட்சியை விட்டு விலகுவேன்

### அநுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை

ஜே.வி.பி.யுடன் பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டுச் சேரத் தவறினால் தான் கட்சியிலிருந்து விலகுவதாக பொதுசன முக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

கொழும்பில் நடந்த உட்கட்சி கூட்டத்தில் இத்தீர்மானம் எடுத்ததாக அவர் மேலும் கூறினார். பொதுசன முக்கிய முன்னணி-ஜே.வி.பி. கூட்டணிக்கு தான் தலைவராக இருப்பாரென்றும் ஜே.வி.பி. இல்லாமல் அரசாங்கத்தை அமைக்க முடியாதெனவும்அநுராபண்டார நாயக்க கூறியுள்ளார். எனினும் மூத்த தலைவர்கள் அநுராவின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். நாங்கள் ஒரு கட்சியாகச் செயற்படுகிறோம் அநுரா பதவி விலக விரும்பினால் அவருடைய தீர்மானத்தை நாங்கள் வரவேற் கிறோம் என மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார்.

# நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் இந்.வெளியுறவுத்துறையுடன் ஆலோசனை

## சமாதான முயற்சி தொடர்பாக இணக்கப்பாட்டுக்குவர முடியும்

### ரணில் நம்புவதாக பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானமுயற்சி தொடர்பாக பொ.ஐ.முன்னணி உட்பட சகல அரசியல் கட்சிகளுடனும் இணக்கப்பாடு ஒன்றுக்குவர முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கின்றார். இது தேசிய நல்லிணக்க அரசாக இருக்கமாட்டா என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று காலைகொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் அரசியல் நெருக்கடியைத் தீர்த்து சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிப்பதை அனுமதிக்கப் பிரதமர் தயார் நிலையில் இருக்கின்றார் என்றார். ஆனால் அமையப்போகும் இணக்கப்பாடு எவ்வாறு அமைந்திருக்கும் என்று அமைச்சர் தெரிவிக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு

**நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் இந்தியாவுக்கு விஜயம் செய்து நேற்று இந்தியவெளியுறவுத் துறையினருடன் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆலோசனை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாகநோர்வே விலகியபின் நடைபெற்ற இச்சந்திப்பின்போது என்ன விடயங்கள் பேசப்பட்டன எனக்கேட்டபோது இந்திய வெளியுறவுத்துறையுடன் பயனுள்ள ஆலோசனைகளை நடத்தினேன், இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் வெளியுறவுத் துறைச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்தேன். எவ்வளவு வெளிப்படையாகப் பேசமுடியுமோ அவ்வளவு வெளிப்படையாகப் பேசினேன் இலங்கையின் அமைதிவழி முறையில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. என்றார்.

இந்தியா இந்த அமைதி விடயத்தில்தீவிரமாகப் பங்காற்றவில்லை இந்த நெருக்கடிக்குப்பின்னர் மேலும் கூடுதலாகப் பங்காற்ற வேண்டும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்க ஏற்பாடு பூர்த்தி

(கொழும்பு)

எதிர்வரும் 19ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் 2004ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அமர்வு 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் போது சனாதிபதி பெரும்பாலும் உரை நிகழ்த்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை வைத்தியசாலையைப் பார்வையிட பா. உறுப்பினர் உள்ளிட்ட குழுவிற்கு படையினர் தடை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றை நேரில் பார்வையிடச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜாவையும் அவரது குழுவினரையும் சோதனைச் சாவடியை கடந்து செல்ல அனுமதிக்காது படையினர் திருப்பி அனுப்பினர்.

மோசமான பாதிப்புக்களுடன் தெல்லிப்பளை பகுதி இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இயங்கிவரும் மேற்படி ஸ்தாபனங்கள் இரண்டையும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பார்வையிடச் சென்ற மாவை சேனாதிராஜா மற்றும் வலிவடக்கு பொது அமைப்புக்கள் ஒன்றியத்தலைவர் எஸ். சிவமகாராஜா, சட்டத்தரணி கே.கணேசலிங்கம் ஆகியோரே இவ்வாறு திருப்பிஅனுப்பப்பட்டவர்கள் ஆவர்.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது, நேற்றையதினம் இவ்வாறான நடவடிக்கைகளுக்காக அங்கு சென்ற இக்குழுவினரை கே.கே.எஸ். வீதியில் மேற்படி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுக்குத் தடிவெட்டச் சென்றவர் கரடியின் தாக்குதலினால் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் ஒருகண்ணை இழந்து படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் ஒட்டுசுட்டான் மேழிவனப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், மேற்படி நபர் மேழிவனம் காட்டிற்குள் தடி வெட்டுவதற்காகச் சென்றவேளை காட்டிற்குள் வைத்து கரடி தாக்கியுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த சிறுமி ஒருவர் மரணம்

கால் இடறி கிணற்றில் வீழ்ந்த சிறுமி ஒருவர் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கையில் வழியில் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 5.00 மணியளவில் விசுவமடு ரெட்பானா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுமி தண்ணீர் அள்ளும் பொழுது கால் இடறி 25 அடி ஆழமான கிணற்றில் வீழ்ந்துள்ளார். உடன் அயலவர்களின் துணையுடன் சிறுமி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு தர்மபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பெற்று அங்கிருந்து கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமாகியுள்ளார். ரெட்பானா பாரதி வித்தியாலய 3ஆம் ஆண்டுமாணவியான அ. பிரிய தர்சினி (வயது-09) என்ற சிறுமியே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக மரணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## மாவீரர் தின அலங்கார வளைவு சீரமைக்க சாவகச்சேரியில் படையினர் தடை!

தமிழீழ மாவீரர் தின நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் அலங்கார வளைவொன்றை சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரின் மையப் பகுதியில் கண்டி வீதி மற்றும் கச்சாய் வீதி சந்தியில் அமைந்துள்ள அலங்கார வளைவுப் பந்தலை மீளப் புனரமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையால் நிறுவப்பட்டிருந்த இவ் அலங்கார வளைவு, 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் இப்பகுதிகளில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது அழிவிற்குள்ளாகியிருந்தது.

இந்நிலையில் மாவீரர் தினத்தை முன்னிட்டு குறித்த அலங்கார வளைவை மீள் புனரமைப்பு செய்ய மாவீரர் தின ஏற்பாட்டுக் குழு வினர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றைய தினம் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வந்த தொழிலாளர்களே படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (27)

## மாவீரர் நாள் நவம்பர்-27

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திரச் சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் C.D. 185 மலிவு விலையில் MD 90, ELF 250 வான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு அறிவமுது பொத்தக சாலை, யாழ். சாலை, கிளிநொச்சி. (3877)

### தமிழீழ தேசப் படம்

தமிழர் மரபு வழித் தாயகப் படம் சகல சிறு ஊர்களையும் குறித்த படி வர்ணத்தில் வெளிவந்துள்ளது. அனைத்து அறிவமுது பொத்தக சாலையிலும் கிடைக்கும்.(சி-8805)

### வார செய்தித் தாள்கள்

தமிழ் அலை, செந்தணல், வீரகேசரி, தினக்குரல் மற்றும் சகல ஆங்கில வார இதழ்களும் அருகில் உள்ள அறிவமுது பொத்தக சாலையில் கழிவுடன் கிடைக்கும்.(சி-8806)

# ஒன்றரை வயதுக் குழந்தை கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக்கோட்டை மாட்டொழுங்கைப் பகுதியில் ஒன்றரை வயதுக் குழந்தை யொன்று நேற்று கிணற் றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.தகப்பன் வேலைக்குச் சென்றிருந்ததாகவும் வீட்டுவேலையில் ஈடுபட்டிருந்த தாய் பிள்ளையைக் காணவில்லை எனத்தேடிய போது கிணற்றில் சடலமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராசலிங்கம் சதீஸ்கரன் என்னும் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக மரணமடைந்துள்ளது. (33)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளி.இல் வீதியோர மரம் நடுகை நிகழ்வு



(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும், வனவளப் பகுதியினரும் இணைந்து நடைமுறைப்படுத்தும் வீதியோர மர நடுகை விழா நேற்றுப் பிற்பகல் 2.15 மணிக்கு கிளி. மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக டிப்போச் சந்தியில் நடைபெற்றது.

த.பு.க. மாவட்ட திட்ட அலுவலர் அ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றல் நிகழ்வினையடுத்து முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் மரக் கன்றினை நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அடுத்து கிளி. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி. ஆனந்தராசா, போருட் நிறுவன வெளிக்கள உத்தியோகஸ்தர் சாந்தலிங்கம், கிளி. மாவட்ட த.பு.க. இணைப்பாளர் ஜெராட், பிரதேச உதவிப் பணிப்பாளர் குபேந்திரன், அரச சார்பற்ற நிறுவன செயலர் வே. சுப்பிரமணியம் ஆகியோர் மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இரண்டாண்டுத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தில் மரக்கன்றுகளை கால் நடைகளினின்றும் பாதுகாக்கும் பொருட்டு சீமெந்து தடுப்பு சுவர் அமைக்கப்படவுள்ளதெனவும், இவற்றிக்கான தொடர் பராமரிப்புக்களை குழு அமைத்து செயற்படுத்தப்பட உள்ளதெனவும் கிளி. மாவட்ட த.பு.க. தொழில சார் அலுவலர் க. ரவிகாந் தெரிவித்துள்ளார். (சோ)

# பல்கலைக்கழக புகுமுக மாணவர் அவசர கலந்துரையாடல்

நாளை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பல்கலைக்கழக புகுமுகமாணவர்ஒன்றியத்தில் 2004 க.பொ.த.(உ/த)பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான செயலமர்வு நாடாத்துவது பற்றிய அவசர கலந்துரையாடல் இடம்பெற இருப்பதால் முல்லைவலய பல்கலைக்கழக புகுமுக மாணவர் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (26)

## வகுப்புகள்

தேசிய கல்வி நிறுவகம் மகாரகமவினால் நடாத்தப்படும்பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி 2 பாடநெறியை கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் தொடருபவர்களுக்கான வகுப்புக்கள் 22,23-11-2003 ஆம் திகதிகளில் கிளி. மத்திய கல்லூரியில் வழமையான நேரத்திற்கு நடை பெறும். பகுதி2 பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கி.சின்னராசா அறிவிக்கிறார்.

# கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய கட்டடத் தொகுதி திறப்பு விழா நாளை காலை 10. மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன நிதியுதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் மேற்படி கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பெற்றுள்ளன. (சோ)

# பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி அடுத்த மாதம் வெளிவரும்

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அடுத்தமாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் எல்.எல். இரத்நாயக்கா தெரிவித்துள்ளார். அனுமதிக்கு 35 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

# செயற்கை முறைச்சினைப்படுத்தலில் 20 பேருக்கு பயிற்சி வழங்கல்

காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையத்தினரால் 20 பயிற்சி யாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

செயற்கை முறைச் சினைப் படுத்தும் பயிற்சிநெறியின் முதற் கட்ட பயிற்சியாக கடந்த 10ம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியானது கடந்த 10ஆம் திகதி 1.00 மணியளவில் காராளி செயற்கை முறை சினைப்படுத்தும் நிலைய திட்ட ஆலோசகர் மா.மகா தேவன் தலைமையில் நடை பெற்றது. இதில் வடமாகாண செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஞானசேகரன் பயிற்சியினை வழங்கினார். சிறப்புக் கருத்துரைகளை யாழ் பல்கலைக் கழகத்தின் விலங்கு விஞ்ஞானத்துறை விவசாய பீட பேராசிரியரும் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவருமான அ.நவரட்ணராஜா அவர்கள் வழங்கினார். (05)

# தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க இணங்கும் எக்கட்சிக்கும் ஆதரவு வழங்கத் தயார்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்

(கொழும்பு)

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க இணங்கும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இ.தொ. காங்கிரஸ் ஆதரவு தர தயாராய் இருக்கிறது என அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்றுக் கூறியுள்ளார்.

அது ஐ.தே.கட்சியாக இருந்தாலும், பொ. ஐ. முன்னணியாக இருந்தாலும் முன் சொன்ன நிபந்தனையின் பேரில் இ. தொ. காங்கிரஸ் ஒத்துழைப்பை வழங்கும் என்று கூறிய அமைச்சர் எமது கட்சி எந்தவொரு தேர்தலையும் சந்திக்க தயாராய் இருக்கிறது. அத்துடன் இ.தொ. காங்கிரஸ் ஒரு தேசியக் கட்சியாகப் போட்டியிடும். தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியை சனாதிபதி மேற்கொண்டால் அது சிறுபான்மை குழுக்களுக்குச் சேவையாற்றும் இ.தொ. காங்கிரஸின் அதிகாரங்களைப் பாதிக்கும் என்றும் கூறியுள்ளார்.

# வவுனியா இடம்பெயர் சேவையில் 3000 மக்கள் பயனடைவு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் இருந்து போர் காரணமாக பிறநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்று சமாதான சூழ்நிலையை அடுத்து மீண்டும் வவுனியா மாவட்டத்திற்கு வந்து மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கான நடமாடும் இடம் பெயர் சேவை ஒன்று வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரச செயலக புனர்வாழ்வுக்கிளையும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலயமும் இணைந்து நடாத்திய இவ் இடம் பெயர் சேவை காலை 9.30 மணி முதல் மாலை 4.30மணி வரை நடைபெற்றது.

பிறநாடுகளில் நடைபெற்று பதியப்படாத திருமணப் பதிவுகளைப் பதிதல், தேசிய அடையாள அட்டை வழங்கல், இலங்கைக்கடவுச்சீட்டு பதிவு, தேர்தல் இடாப்பு பதிவு, பிறநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கான இலங்கை பிறப்பு அத்தாட்சிப்பத்திர பதிவு, காணி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள், நிவாரண விநியோகம், சாரதி அனுமதிப்பத்திர சேவை, புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள், பெரியவர்கள் குழந்தைகளுக்கான தடுப்பூசி ஆலோசனைகள் ஆகிய சேவைகள் இவ் இடம் பெயர் சேவையில் மேற்கொள்ளப்பட்டன.

இடம் பெயர்சேவை மூலம் ஏறத்தாழ 3000 மக்கள் பயனடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (13)

# வடக்கு கிழக்கில் தற்போது 4820 ஆசிரியர் வெற்றிடங்கள்

## அமைச்சர் சுரணிமல ராஜபக்ச தெரிவிப்பு

தற்போது 4820 ஆசிரியர்களுக்கு 132 அதிபர்களுக்கும் வெற்றிடங்கள் வடக்கு, கிழக்கில் இருப்பதாக சனியன்று மாலை கல்வி அமைச்சில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் சுரணிமல ராஜபக்ச தெரிவித்தார்.

வடக்கில் தற்போது பணியாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் பட்டியலை ராஜபக்ச காட்டினார். இதன்படி 19,194 ஆசிரியர்கள் வடக்கில் தற்பொழுது சேவையிலுள்ளனர். வவுனியா, திருமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாட்டில் உலக வங்கியின் வடகிழக்கு மாகாணப் பொது கல்வித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிசம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

இம் மாநாட்டில் [illegible]கிழக்கின் வலய கல்வி உத்தியோகத்தர்கள் கிழக்குமாகாண வலய கல்வி, உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றியதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. பொது கல்வித் திட்ட செயலாளர் நமுகம்ட தம்பி, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜி.பி.எச். லியனகே ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# யாழ். இராணுவச் சாரதிகளுக்கு துறைசார் அறிவு இல்லை

## ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடமையில் இருக்கும் இராணுவ வாகன சாரதிகள் தொடர்பான ஆய்வாளர் குழுவின் அறிக்கை நாளை இராணுவ தலைமையகத்திடம் கையளிக்கப்படும்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் நடைபெற்று வந்த இராணுவ வாகன விபத்துக்களைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இக்குழுவால் இதுவரை காலமும் நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கையே இவ்வாறு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இராணுவ அதிகாரி சுமந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்விசாரணை ஆய்வுகள் மூலம் குடாநாட்டில் கடமை புரியும் இவ்வாறான இராணுவ வாகன சாரதிகள் துறை சார்ந்த அறிவு இன்மையும் சீராகக் செய்யப்படாத வாகனப் பாவனையுமே இவ்வாறான விபத்துகளுக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# நாடு கடத்தப்பட்ட பாகிஸ்தான் பிரஜைகளை ஏற்றிச் செல்ல விமான நிறுவனங்கள் மறுப்பு

இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட 130 பாகிஸ்தான் பிரஜைகளை தாயகத்திற்கு அழைத்துச் செல்ல வெளிநாட்டு விமான சேவை நிறுவன விமானிகள் மறுப்புக் கூறியுள்ளார்கள்.

இலங்கை ஊடாக இத் தூலிக்கு சட்ட விரோதமாகச் செல்ல முற்பட்ட இந்த 130 பாகிஸ்தானிய பிரஜைகள் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களில் முதலாவது குழுவினர் நேற்று பாகிஸ்தானுக்குச் செல்ல இருந்தனர். இவர்களை நாடு கடத்துவதில் சர்வதேச சட்டத்திற்கு அமைய அதிகாரிகள் நடந்து கொள்ளவில்லையென்று கூறி வெளிநாட்டு விமான சேவை விமானிகள் மறுப்புக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து பாகிஸ்தான் பிரஜைகள் தமது நாடு திரும்புவது தடைப்பட்டுள்ளது.

# உலக நாடுகளின் நீண்டகால பாதுகாப்பிற்கு மற்றுமொரு யுத்தத்திற்கு அமெரிக்கா தயார்!

## -சனாதிபதி புஷ் அறிவிப்பு

உலக நாடுகளின் நீண்டகாலப் பாதுகாப்பைக் கருதி அமெரிக்கா மீண்டும் ஒரு யுத்தத்தை மேற்கொள்ளவோ ஈடுபடவோ தயாராக இருப்பதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.

பிரிட்டனுக்கான சுற்றுப்பயணத்தை புஷ் மேற்கொள்ளவுள்ள நிலையில் பிரிட்டன் செய்தி நிறுவனத்திற்கு புஷ் இவ்வாறு நேற்று முன்தினம் பேட்டியளித்துள்ளார்.

ஈராக் சம்பந்தமாக் கருத்துக் கூறிய புஷ் அமெரிக்கா தலைமை யிலான கூட்டணிப் படைகள் ஈராக்கில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த சதாம் ஹுசைனின் ஆட்சியை இல்லாது அழித்து விட் டார்கள்.என்றும் ஆப்கானிஸ்தானில் அல்-ஹைதா இயக்கத்தினர் முறியடிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக ஐக்கியநாடுகள் சபையின் தீவிர கவனத்தைப் பெறுவதிலும் வெற்றி காணப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.



மேற்குக் கரை காசாநகரில் இஸ்ரேலிய வீரர்களுக்கு கல்லெறிந்த இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான சிறுவனின் இறுதிக் கிரியையின் போது கோஷமிடும் பலஸ்தீனர்கள்.

## பாகிஸ்தானில் பின்லேடன்!

சர்வதேச அளவில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வரும் ஒஸாமா பின்லேடனும் தலிபான் தலைவர் முல்லா ஓமரும் பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் ஒளிந்து வாழ்வதாக ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சர் அலி அகமட் ஜவாலி கூறியுள்ளார்.

தனது மூன்று நாட்கள் மொஸ்கோப் பயணத்தைமுடித்துக் கொண்டு திரும்புகையில் செய்தியாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார்.

## குற்றச்சாட்டு

பாகிஸ்தான் இஸ்லாமிய சமயப் பள்ளிகள் ஊடாக இந்தியாவின் கிழக்குப் பகுதி எல்லைக்குள் ஊடுருவல்காரர்களைஅனுப்பிக் கொண்டிருப்பதாக இந்து மதவாத அமைப்பான ஆர்.எஸ் .எஸ்.தலைவர் கே.சி.சுதர்ஸன் குற்றம் சாட்டியுள்ளார்.கான்பூரில் ஆர்.எஸ்.எஸ்.இயக்கப் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியதுடன்,சில சக்திகள் எமது நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க முயன்று வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# அமெரிக்கப் படையினருக்கு எதிராக புனிதப் போருக்கு அணிதிரளுங்கள்!

## சதாம் ஒளிநாடா ஊடாக அறை கூவல்

**ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கு எதிராகப் புனிதப் போரைத் தொடங்குமாறு சதாம் ஹுசைன் அழைப்பு விடுத்துள்ளார். ஒளிநாடா மூலம் சதாம் ஹுசைனின் அழைப்பை அல்-அரேபியா தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒளிபரப்பியுள்ளது.**

அத்துடன் வருங்காலத்தில் அமெரிக்கா தலைமையிலான படையினர் மிக அதிகளவில் கொல்லப்படுவார்கள் எனவும் அவ் ஒளிநாடா மூலம் எச்சரிக்கையும் செய்துள்ளார்.

அத்துடன் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக போராடுவது ஒவ்வொரு ஈராக்கியர்களின் கடமையாகும் என்றும் சதாம் ஹுசைன் கூறியுள்ளார்.

ஈராக்கை ஆக்கிரமித்தமையினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தவறாக எடை போட்டு விட்டன. என்றும் இந்த நாடுகளின் தீய நோக்கங்களுக்கு எதிராக ஈராக்கியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்கள் என்றும் சதாம் ஹுசைன் எச்சரிக்கை செய்துள்ளார்.

கூட்டணிப் படைகளுடன் ஒத்துழைக்கும் ஈராக்கியர்களை குறை கூறியுள்ள அவர் ஈராக்கின் மாபெரும் சக்தி மீது குறைந்த பட்ச அதிகாரத்தையோ அரசியல் தாக்கத்தையோ அவர்களால் ஏற்படுத்தி விடமுடியாது.

என்றும் பாக்தாத் வீதிகளில் அமெரிக்க இராணுவத்தினரால் சுதந்திரமாக நடமாட முடியாது என்றும் சதாம் ஹுசைனின் எச்சரிக்கை ஒளிநாடாவில் உள்ளது.

ஆனால் சதாம் ஹுசைனின் இந்த ஒளிநாடா பேச்சு ஒரு நாடகம் என்றும் அமெரிக்கப் படையினருக்கு எதிரான பிரச்சாரமே இது என்றும் அமெரிக்க சனாபதி புஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் அமெரிக்காவையும் அதன் படைகளையும் வெளியேற்றும் தந்திரமே சதாமின் ஒளிநாடாப் பேச்சு எனகூறியபுஷ்தனதுமுயற்சிகளில் சதாம் ஹுசைன் தோல் வியே அடைவார் என்றும் கூறியுள்ளார்.



அமெரிக்காவின் 4ஆவது காலாட் படைப்பிரிவினர் மீது ஈராக்கிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து பகூபாவில் தேடுதல் நடத்திய வேளை வீட்டுக்கு வெளியே வந்து பதுங்கியிருக்கும் சிறுவர்கள் பயத்துடனும் குளிரிலும் நடுங்கிய வண்ணம் காணப்படுகின்றனர்.

# துருக்கிய குண்டு வெடிப்புக்களுக்கு அல் - ஹைதா இயக்கம் பொறுப்பேற்பு

துருக்கியில் மேற்கொள்ளப்பட்ட யூத ஆலயங்கள் மீதான தாக்குதலுக்குத் தாமே பொறுப்பு என ஒஸாமா பின்லேடன் அல்-ஹைதா இயக்கம் உரிமை கோரியுள்ளது.

லண்டனில் இருந்து வெளியாகும் அரபு மொழியிலான அல்-அராபிப் பத்திரிகையே இந்தச் செய்தியைப் பிரசுரித்துள்ளது.

தீவிரவாதக் குழுவினால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட இரு குண்டுத் தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டனர். இருநூறுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.இரண்டு வாகனங்களில் தலா 400 கிலோகிராம் எடையுள்ள வெடி பொருட்களை நிரப்பி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட இரண்டு யூத ஆலயங்களுக்கு அருகிலும் காணப்பட்ட இரண்டு சடலங்கள் தற்கொலைத்தாக்குதல் நடத்தியவர்களுடையதாக இருக்கலாம் என துருக்கி அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

துருக்கி அதிகாரிகளுக்கு உதவுவதற்காக இஸ்ரேல் புலனாய்வுப்பிரிவினர் துருக் கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இதற்கிடையில் கடந்த வாரம் சவுதியின் றியாத் நகரில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கும்தமக்கும்தொடர்பில்லை என அல்-ஹைதா இயக்கம் வார இறுதியில் தெரிவித்துள்ளது.

## பலஸ்தீனப் பிரதமருடன் பேச கமாஸ் இயக்கம் இணக்கம்

பலஸ்தீனப் பிரதமர் அகமத் கூரியுடன் பேச்சு நடத்த கமாஸ் தீவிரவாத இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

எனினும் இஸ்ரேல் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த முடியாதென அது கூறியுள்ளது.

தற்போதைய சூழலில் சமாதானத்திற்கு வாய்ப்பில்லையென கமாசின் ஆன்மீகத் தலைவர் தெரிவித்துள்ளார்.கடந்த காலத்தில் சமாதானத்திற்கான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன எனவும் பலஸ்தீன மக்கள் பாதுகாப்புடன் வாழ்வதை இஸ்ரேல் விரும்பவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கொரியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயன்றளவு அமெரிக்கா முயற்சி

வடகொரியாவின் விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சு வார்த்தைகள் நடப்பதற்கான இயன்றளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதன் முதல் அம்சமாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட்ரம்ஸ் பீல்ட் தென்கொரியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அதேசமயம் அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ் கெல்லி யப்பானிய விஜயத்தை நேற்று முடித்துக் கொண்டு பீஜிங் ஷோல் நகர்களுக்குச் செல்லவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா வடகொரியா, சீனா, தென்கொரியா, யப்பான் ரஷ்யா ஆகிய நாடுகள் ஏற்கனவே பீஜிங்கில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியுள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகின்ற போதும் அதற்கான திகதிகள் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை.

## பிரச்சினைகளைத் தீர்க்க சிரியா இந்தியாவின் கருத்திற்கு ஆதரவு

இந்தியா.பாகிஸ்தான் இடையேயுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சிம்லா உடன் படிக்கை மற்றும் லாகூர் பிரகடனம் என்பவற்றின் அடிப்படையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு முக்கிய அரபு நாடான சிரியா நேற்று முன்தினம் ஆதரவு வழங்கியுள்ளது.

பாகிஸ்தானுடன் நட்புறவை ஏற்படுத்தி அயல் நாட்டு உறவை ஏற்படுத்த பிரதமர் வாஜ்பாய் எடுத்துள்ள முன் முயற்சிகளை சிரியா வரவேற்றுள்ளது.

டமாஸ்கஸ்ரிலிருந்து பிரதமர் வாஜ்பாய் தனது 3 நாட்கள் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்புவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களின் படி தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு தருவதற்கு இந்தியாவும் சிரியாவும் ஆதரவு தெரிவித்துள்ளது.



துருக்கி -இஸ்நான்புல் நகரில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பலியான துருக்கிப் பொலிசாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு அஞ்சலி செய்யும் துருக்கிப் பிரதமர் ரிசேப் டயிப் எடோகர்(வலது) வெளிநாட்டு அமைச்சர் அப்துல்லாகுல்(இடது) சட்டத்தரணி டர் ஹரான் கோமஸ் (மத்தி) ஆகியோர்.




# சிறிலங்கா-இங்கிலாந்து கிரிக்கெட் தொடர் ஆரம்பம்...

## பலமான நிலையில் இங்கிலாந்து

சிறிலங்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் இன்று தம்புள்ளையில் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டியுடன் ஆரம்பமாகின்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் இரண்டு ஒரு நாள் போட்டித் தொடரில் கலந்து கொண்ட சிறிலங்கா அணி இரண்டு



போட்டித் தொடர்களிலும் தோல்வி அடைந்த நிலையில் இப் போட்டித் தொடர் முக்கியத்துவம் பெறுகிறது.

தற்போது ஐந்து மாதங்களாக எவ்வித சர்வதேசப் போட்டிகளிலும் கலந்து கொள்ளாத சிறிலங்கா அணி உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் பல டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் கலந்து கொண்டு பலமான நிலையில் உள்ள இங்கிலாந்து அணியை எதிர்கொள்வது பாரிய சவாலுக்குரியதொன்றாக இருக்கப் போகின்றது.

முக்கியமாக என்றுமில்லாதவாறு இங்கிலாந்து அணி ஒருநாள் போட்டிகளில் மிகுந்த திறமை காட்டி வருகின்றமை கிரிக்கெட் ரசிகர்களை வியக்க வைத்துள்ளது.

அண்மையில் இங்கிலாந்தில் நிறைவடைந்த ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியைத் தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது. பங்களாதேஷ் அணியுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் டெஸ்ட் தொடர் என்பனவற்றை முழுமையாகக் கைப்பற்றியமை என்பன அதன் சிறந்த பெறுபேறுகளைக் காட்டுகின்றன.

இதேவேளை சிறிலங்காவில் இதுவரை நடைபெற்றுள்ள இருநாடுகளுக்கும் இடையிலான ஏழு ஒரு நாள் போட்டிகளில் ஒன்றில் மாத்திரமே இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது. ஆனால் முன்பு நடைபெற்ற போட்டிகளின் போது இங்கிலாந்து அணி டெஸ்ட் போட்டியில் மாத்திரமே மிகுந்த ஆர்வமும் திறமையையும் காட்டியது. ஆனால் தற்போது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் மிகுந்த திறமை காட்டி வருகின்றது.

எனவே இப் போட்டித் தொடரில் சிறிலங்கா அணி வெற்றி பெறுவது என்பது பலப் பரீட்சைக்குரிய சவாலாக அமையப் போகின்றது.

ஒருநாள் போட்டிகள் இடம் பெறும் மைதானங்களைப் பொறுத்த வரையில் தம்புள்ளை மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளதுடன் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி 200 ஓட்டங்களைத் தாண்டுமானால் பரலுக்கு ஆடும் அணி வெற்றி பெறுவது கடினமானதாக இருக்கும்.

மந்தமான ஆடுகளத்தைக் கொண்ட இந்த மைதானத்தில் அணிகளுக்கிடையிலான வெற்றியைத் தீர்மானிப்பதில் நாணயச் சுழற்சி முக்கியத்துவம் பெறும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

ஏனைய இரு போட்டிகளும் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன. இவ் ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பெரும்பாலும் சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது பலமான நிலையில் உள்ள இங்கிலாந்து அணியிடம் சிறிலங்கா அணி முதல் ஒருநாள் போட்டியில் தோல்வி அடைந்தாலும் மற்றைய இரு போட்டிகளையும் வெற்றி பெறுவதற்கு முரளிதரனின் பங்களிப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கலாம். மாறாக முரளிதரனும் சிறிலங்காவில் நடைபெறும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வழமையான தனது திறமையை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. அதேபோன்று ஏனைய பந்து வீச்சாளர்களும் உள்ளூரில் தமது திறமையை வெளிப் படுத்துவார்கள் என எதிர்பார் க்கப்படுகிறது.

ஒட்டுமொத்தத்தில் நீண்ட நாட்களின் பின்னர் வெளிநாட்டு அணி ஒன்றை புதிய பயிற்சியாளருடன் எதிர்கொள்ளும் சிறிலங்கா அணி சவால் ஒன்றை எதிர்கொள்ளவுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இது இவ்வாறிருக்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித்தொடரை 3-0 என்ற நிலையில் கைப்பற்றினாலும் சிறிலங்காவுக்கு எதிரான தொடர் இங்கிலாந்து அணிக்குக் கடுமையான சவாலாக அமையும் என்று இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் நாங்கள் இருக்கும் வாரங்களானது எங்களுக்கு மிகவும் சவாலானதாகும். இந்தத் தொடர் அணிக்குப் பெரும் சோதனை தரும் தொடர். இங்கிலாந்து அணியின் பலத்தைச் சோதிக்கும் தொடர். எங்களைப் பொறுத்தமட்டில் இந்தத் தொடர் மிகவும் முக்கியமானது. பங்களாதேசிற்கு எதிராக ஒட்டுமொத்தத் தொடரையும் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தோம். அதன் படி கைப்பற்றிவிட்டோம். ஆனால் உண்மையான சவால் இனி மேல் தான் எனத் தெரிவித்த வோகன,

சிறிலங்காவில் சிறப்பாக விளையாடுவதென்பது கடினமான ஒன்று. ஏனெனில் சொந்த மண்ணில் சிறிலங்கா அணி மிகச் சிறப்பாக விளையாடும் என்பதை நாங்கள் நன்கு அறிவோம் எனத் தெரிவித்தார்.



சிறிலங்காவில் நிலவும் சூழ்நிலை குறித்து எங்களுக்கு ஓரளவு தெரியும். ஆனால் தற்போதைய இங்கிலாந்து அணியில் இடம்பெற்றிருக்கும் பெரும்பாலான வீரர்களுக்கு ஜெயசூரிய, மஹேலவாஸ், முரளிதரன் ஆகியோரைப் பற்றித் தெரியாது என்றார்.

**வடிவேல்**

இந்நிலையில் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் இப்போட்டித் தொடரின் புதிய முறையிலான பந்துவீச்சைப் பிரயோகிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# பரபரப்புக்கு மத்தியில் T.V.S இறுதியாட்டம்

இன்று கல்கத்தாவில் ஈடன் கார்டனில் நடைபெறவுள்ள T.V.S. முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் திட்டமிட்டபடி மோதவிருக்கின்றன. இது கிரிக்கெட் ரசிகர்களுக்குப்



பெரும் பரபரப்பான போட்டியாகக் கருதப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இதுவரை நடைபெற்ற 6லீக் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி ஒரேயொரு போட்டியில் அதாவது இந்தியாவுடன் நடைபெற்ற முதல் லீக் போட்டியில் மட்டும் தோல்வியைச் சந்தித்து இறுதியாட்டத்துக்கு தயாராகிவிட்டது. அவ்வணி நியூசிலாந்து அணியுடன் விளையாடி 225 ஓட்டங்களைப்பெற்று நியூசிலாந்துக்கு இலகுவான வெற்றி இலக்கை நிர்ணயித்திருந்தபோதும் நியூசிலாந்து அணியை அது 44 ஓட்ட வித்தியாசத்தில் வென்று தான் உலக சம்பியன் என்பதை நிரூபித்து விட்டது. உலக சம்பியன் அணியையே 225ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்திய நியூசிலாந்து அணி தனது கடைசி லீக் பந்தயத் தில் வாழ்வா சாவா என்ற நிலையில் ஏனோ இந்திய அணிக்கு 353 ஓட்டங்களை வாரி வழங்கி இறுதியாட்டக் கனவை இழந்தது. ஒரு போட்டியில் இந்திய அணியை நான்கு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி இறுதி லீக் பந்தயத்தில் இந்தியாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குப் பிரவேசித்துவிடும் என்றே கருதப்பட்டது. ஏனெனில் இந்திய அணியின் பந்து வீச் சாளர்களாலும் களத் தடுப்பு முறையாலும் அவுஸ்திரேலிய அணியுடனான இரு லீக்போட்டியில் 77, 61 என்ற பெரும் ஓட்ட வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வியைச் சந்தித்திருந்தது.

இந்த நிலையில் யாரும் எதிர்பார்க்காத வகையில் அது 145 ஓட்ட வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

நியூசிலாந்து அணியைப் பொறுத்தவரையில் அவ்வணியின் தலைவரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான பிளெமிங் சுகயீனம் காரணமாக பங்குபற்றாதது நியூசிலாந்து அணிக்கு பலவீனமான நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இத்தொடரின் இரு போட்டிகளில் ஓட்டம் எதுவும் எடுக்காதநிலையில் ஆட்டமிழந்த விரேந்தர் சேவாக் கடைசி லீக் போட்டியில் தனது திறமையை மீண்டும் நிரூபித்துக் காட்டினார் அவர். 130 ஓட்டங்



களைப் பெற்று ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

தம்மை உலக சம்பியனாக நிலைநாட்டியிருக்கும் அவுஸ்திரேலிய அணியும் தமது அணியில் சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் நாம் பலமானவர்கள் என்



பதை லீக் போட்டிகளில் நிரூபித்துக் காட்டியுள்ள நிலையில் இன்று இந்தியாவை இறுதிப் போட்டியில் சந்திக்கவுள்ளதுடன் கிண்ணத்தைக் கைப்பற்றும் நம்பிக்கையுடன் இருக்கின்றது. காரணம் இதுவரை கடுமையாக உழைத்து இறுதிப் போட்டிக்கு வந்துள்ள நிலையில் கிண்ணத்தைப் பறிகொடுக்குமாயின் அது அவ்வணிக்குப் பாரிய தலைகுனிவாகலாம்.

இந்நிலையில் தமது தாய் நாட்டில் நடைபெறும் இறுதிப் போட்டியாக இது அமைவதால் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு இந்தியா கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எது எவ்வாறாயினும் கடின உழைப்பும் அதிர்ஷ்டமுமே அதனைத் தீர்மானிக்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

## ஆயிரம் ஓட்டவீரர் வரிசையில் சச்சின்

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்த ஆண்டு இதுவரை 1000 ஓட்டங்களைப்பெற்றுள்ளார் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். இது சச்சினின் ஓர் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களைப்பெறும் ஆறாவது முறையாகும். கடந்த சனியன்று ஹைதராபாத்தில் நியூசிலாந்துக்கு எதிராக ஆறாவது ஓட்டத்தை பெற்றபோது சச்சின் 1000ஓட்டங்களை எட்டினார். இந்த ஆண்டு சச்சின் பங்கேற்ற 20ஆவது போட்டியாக இது அமைந்துள்ளது.இதுவரை 320 போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டு ஆயிரம் ஓட்டங்களை நிறைவு செய்த உலகின் ஐந்தாவது வீரர் என்ற பெருமையும் சச்சினுக்குக் கிடைத்துள்ளது. அவுஸ்திரேலிய ஒரு நாள் அணியின் தலைவர் பொண்டிங் 33 போட்டிகளில் 1118ஓட்டங்கள், ஆஸி அணியின் மத்யூஹைடன் 31 போட்டிகளில் 1018 ஓட்டம் பாகிஸ்தானின் யூசுப் யுஹானா 28 போட்டிகளில் 1051 ஓட்டங்கள் என ஆயிரம் ஓட்டங்களை ஏற்கனவே நிறைவு செய்துள்ளனர். ஹைதராபாத் போட்டியுடன் சச்சின் 320 போட்டிகளில் கலந்து கொண்டு 12640 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 35சதமும் 64 அரைச்சதங்களும் அடங்கும்.

# பொதுத் தேர்தலை நோக்கி சிறிலங்கா...?

சிறிலங்காவின் அரசியல் நிலை கடந்த இருவாரங்களாக மிக வேகமான மாற்றங்களைக் கொண்டதாக அமைந்து வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு திடீர் தேர்தல் அறிவிக்கப்படலாம் என்பது அநேகமான ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

கடந்த 4ஆம் திகதி முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பறித்துக் கொண்டதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தீவிரம் பெற்று வருகின்றமை திடீர் தேர்தல் ஒன்றுக்கே வழி சமைக்கும் அல்லது அதைத் தவிர இந்த நெருக்கடி தீர வழியில்லை என்பதே பெரும்பாலானோரின் கருத்தாகும்.

2001ஆம் ஆண்டு இறுதியில் தெரிவு செய்யப்பட்ட 12ஆவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் குறுகியது என்பது அன்றே முடிவு செய்யப்படக்கூடிய ஒன்றாகவே இருந்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் கட்சிக்கு என்றுமே எதிர்க் கட்சியாக உள்ள ஐ.தே.முன்னணி பாராளுமன்றத்தைக் கைப்பற்றியமை மக்களின் தீர்ப்பாக இருந்தாலும் அதனை மதித்து நடக்கும் மனோநிலை சனாதிபதி சந்திரிகாவிற்கு இருக்கவில்லை. மக்கள் ஐ.தே. முன்னணியை ஆட்சிக்குத் தெரிவு செய்த போதிலும் அதனைப் பதவியிலமர்த்த சனாதிபதி சந்திரிகா உடனடியாக முன்வரவில்லை.

அப்பொழுதே அவர் தனது கையிலிருந்த பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சை கைவிடத் தயாராக இராமையே இதற்குக் காரணமாக இருந்தது.பின்னரும் கூட முப்படைகளினதும் தளபதி என்ற பொறுப்பை வைத்துக்கொண்டு முப்படைகளினதும் செயற்பாட்டில் மூக்கை நுழைத்துக் கொண்டேயிருந்தார்.

குறிப்பாக தளபதிகளை நியமித்தல் பதவி உயர்வு விவகாரத்தில் ஆளும் கட்சியின் அபிப்பிராயத்துக்கு மாறாகவே அவர் நடந்து கொண்டிருக்கிறார். அதனை விட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் செயற்பாட்டிற்குப் பெரிதும் முட்டுக்கட்டை போடுபவராகவே அவர் இருந்து வந்துள்ளார்.

இதனை விட பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவை அவர் தம் வசமே வைத்துக் கொண்டார். அத்துடன் இறுதியாக பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தனது எண்ணப்படி ஒருவரை நியமிக்கவில்லை என்பதற்காக இன்னமும் கூட ஒருவர் நியமனமாகாத நிலையிலேயே பொலிஸ் திணைக்களம் இயங்கி வருகிறது.

இவ்வாறு இந்தவிடயத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை விளைவித்து வந்த அவர் கடந்த 4ஆம் திகதி எடுத்த நடவடிக்கை மூலம் அரசாங்கத்தை ஸ்தம்பிதம் அடைய வைத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒருவருட காலத்திற்கு சனாதிபதிக்கு அதனைக் கலைக்கும் அதிகாரம் இல்லாமையால், ஒருவருடம் பூர்த்தியாகியதும் அது கலைக்கப்பட்டே தீரும்/ தீரவேண்டும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் கருத்தாக இருந்தது.ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கான காலத்தை இரண்டு வருடங்களாக நிர்ணயித்திருந்தார்.



ஏனெனில் அதற்குள் ரணிலுக்கு இருந்த மக்கள் ஆதரவு அற்றுப்போய் பொதுசன ஐக்கிய முன்னணியை மக்கள் ஆட்சியில் அமர்த்தும் மனோநிலைக்கு வருவார்கள் என்பதே அவரது எண்ணமாகும்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த பொதுத் தேர்தலின் போது முன்வைத்த சமாதான கோஷம், பொருளாதாரத்தில் அன்று சிறிலங்கா கண்டிருந்த பின்னடைவு என்பன சந்திரிகாவிற்கு அந்த எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தது.அதாவது சமாதான முயற்சிகள் எவ்வாறேனும் இரண்டு வருடங்களுக்கும் கைவிட்டுவிடப்படும்/ தோல்வியடைந்து விடும் என்பது அவரது கணிப்பீடாகும். இரண்டாவதாக பொருளாதார நிலையானது சமாதான முயற்சிகள் ஆதோல்வியடையுமாயின் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுவிடும் அதனால் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைக் கைவிட்டு ஓடுவார் என்பதும் அவரது கணிப்பாகும்.

இதன் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணியின் "யுத்தம் மூலம் சமாதானம்" என்ற கோஷம் வலுப்பெறும், இயல்பாகவே தனது கைக்கு ஆட்சி வந்து சேரும் என அவர் பெரிதும் நம்பியிருந்தார்.

ஆனால் கடந்த இரண்டாண்டு காலம் அவர் நினைத்ததற்கு எதிர்மாறாகவே சம்பவங்கள் இடம்பெற்றன. இச்சம்பவங்கள் அவரது எதிரிகளான விடுதலைப் புலிகளையும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியையும் கதாநாயகர்களாக்கியதுடன் அவரை வில்லி நிலைக்குத் தள்ளியது.அதாவது அவரின் எதிர்ந்தரப்பின்சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர் அவர் என்ற நிலையை உலக அரங்கில் ஏற்படுத்தியது.

எனவே இப்பொழுது அவர் எதனையும் பொருட்படுத்தும் மனோநிலையில் இல்லை அவர் வைத்த இரண்டு வருடகால கெடுவுக்குள் பாராளுமன்றத்தில் தனது கட்சியை நிலைநிறுத்தும் முயற்சியில் அதிரடியாகவே இறங்கியிருக்கிறார்.

இது ஏறத்தாழ ஒரு சூதாட்டம் போன்ற முயற்சியாகும்.இதில் அவர் வெற்றி பெற்றேயாக வேண்டும்.அல்லது அவரது அரசியல் வாழ்வின் இறுதிக்காலம் பாரதூரமானதாக இருக்கும் என்பது சந்திரிகாவிற்கு நன்றாகவே தெரியும்.

எனவே அவர் இதற்கென எடுத்த நகர்வானது பாராளுமன்றத்தைக் கலைக்காது ஆட்சியைப் பெற முடிந்தாலென்ன அல்லது தேர்தல் ஒன்றை எதிர்நோக்க வேண்டி வந்தாலென்ன சாதகமாக இருக்கக் கூடியதாகவே அமைந்தது.

அதாவது அவரது அகராதிப்படி தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள பொலிஸ் திணைக்களமும் ஊடகத்துறையும் கைவசம் இருத்தல் வேண்டும் என்பது முக்கியமானதாகும். எனவே அவர் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க காரணத்தை முன் வைத்துவிட்டு ஏனைய இரு துறைகளையும் தன்வசப்படுத்தியுள்ளார். இதன்மூலம் அவர் தேர்தலை எதிர்கொள்ள அடிப்படையான ஏற்பாடுகளைச் செய்துவிட்டார் என்றே கூறலாம்.



அடுத்து தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசம் இழுக்க முடியுமானால் பாராளுமன்றத்தைக் கலைக்காது ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி. அதில் அவர் இதுவரை வெற்றி பெறவில்லை போலவே தெரிகின்றது.

இதேவேளை புதியதொரு சங்கடமும் இப்போது அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதாவது பொதுத் தேர்தலை எதிர் கொள்ளாது ஆட்சியமைக்க ஜே.வி.பி.யின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் அவருக்குத் தேவை. ஆனால் ஜே.வி.பி. புதிய நிபந்தனையாக கூட்டுச் சேர்வதனால் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

ஜே.வி.பி.யை இணைத்துக் கொண்டு ஆட்சியை நடத்துவது என்பது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை மட்டுமல்ல இன்றைய சூழ்நிலையில் சிறிலங்காவிலுள்ள இரு பெரும் கட்சிகளுக்குமே சங்கடமானதாகும். மேற்குலகின் உதவியை நம்பியே ஆட்சி நடத்தவேண்டியுள்ள இவர்கள் ஜே.வி.பி.யை இணைத்துக் கொண்டால் அந்த உதவியைப் பெற்றுக் கொள்வதில் சில பாதகங்களை அடைவர். ஆனால் அதனையும் மீறி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு இணக்கப்பாட்டுக்குச் செல்லத் தயாராக உள்ள போதும் ஜே.வி.பி.யின் புதிய நிபந்தனை அவரை மேலும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது.

அண்மைக் காலத்தில் ஜே.வி.பி. நடத்திய சமாதான எதிர்ப்பு ஊர்வலங்களில் கலந்து கொண்ட மக்கள் தொகை மூலம் அதற்கு மக்கள் ஆதரவு பெருகியுள்ளது என்ற ஜே.வி.பி.யின் வாதத்தின் அடிப்படையில், தேர்தல் ஒன்று நடைபெறுவதையே ஜே.வி.பி. விரும்புகிறது. இதன்மூலம் சு.க.வுடன் கூட்டுச் சேரும் போது கூடுதல் ஆசனங்களைப் பேரம் பேசிப்பெற்றுக்கொள்ள முடியும். குறைந்தது 25 பாராளுமன்ற உறுப்பினர்களையாவது அடுத்த பாராளுமன்றத்தில் கொண்டிருக்க முடியும் என ஜே.வி.பி. நம்புகிறது.

அடுத்த படியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சி-அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இன்றைய நிலையில் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்பது வெளிப்படை. முதலாவதாக அது பாராளுமன்றத்தில் இன்றும் பெரும்பான்மை உறுப்பி னர்களின் ஆதரவைக் கொண் டிருக்கிறது.

இரண்டாவதாக கடந்த இரு வருடங்களாக இலங்கையில் நிலவிய அமைதி, சமாதான நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டு உதவிகள் என்பவற்றால் கிடைக்கப் போகும் சாதகநிலைகளை தனது எதிரியான சு.க.வுடன் பங்கு போட்டுக் கொள்ள ஐ.தே.க. விரும்பாது.

மூன்றாவதாக, மக்களை எதிர்கொள்ள அதாவது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு ஐ.தே.க.விற்கு எதுவித தயக்கமும் இல்லை. உண்மையில் அது பொதுத்தேர்தலை விரும்புகிறது என்றே கூறவேண்டும். அதன் மூலம் முன்னரை விட கூடுதல் ஆசனங் களைப்பெறமுடியும் என நம்புவதுடன் மக்கள் வழங்கப் போகும் தீர்ப்பின் மூலம் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்தை நெருக்கடிக்குள் தள்ள முடியும் என்பது அதன் கடந்த கால அனுபவமாகும்.

அத்துடன் கடந்த இரு வாரங்களாக செயலற்றுப் போயுள்ள ஐ.தே.முன்னணி அரசாங்கம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுமானால் ஒருவருட கால நிச்சயமான ஆட்சியையும் சனாதிபதிக்கு ஒரு பதிலடியையும் கொடுக்க முடியுமென எண்ணுகின்றது.

இப்பொழுது பொதுத்தேர்தலுக்குத் தயங்கும் கட்சிகளாகப் பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் நுஆ, ஈ.பி.டி.பி, புளொட் ஆகியனவுமே காணப்படுகின்றன.எனினும் சு.க.வுக்கு பாராளுமன்றத்தைக் கைப்பற்றமுடியாத சூழல் தோன்றுமாயினும் வேறுவழியின்றி அதற்குத் தயாராக வேண்டியுள்ள நிலையே அக்கட்சிக்கு உண்டு.

சகவாழ்வு அரசியல் சமாதியடைந்த நிலையில் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே நேரடிப் போட்டி வலுப்பெறுமாயின் பாராளுமன்றம் கலைக்கப்படுவதைத்தவிர வேறு முடிவு இல்லை.

**- வேலவன்**

## வைத்தியர்கள் தாதிமாரிடையே முரண்பாடு இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு ஸ்தம்பிதம்

தராப்பிட்டிய வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக 2100 சத்திரசிகிச்சை நோயாளர்கள் ஆதரவற்ற நிலை யில் இருக்கிறார்கள்.

தராப்பிட்டிய வைத்திய சாலையில் வைத்தியர்களுக்கும் தாதி மார்களுக்குமிடையே முரண்பாடுகள் எழுந்துள்ளன. இதன் காரணமாக இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் சத்திரசிகிச்சைக்கு காத்திருந்த 2100 நோயாளிகள் மிகவும் துன்பத் திற்கு ஆளாகியுள்ளார்கள்.

தராப்பிட்டிய வைத்தியசாலை யில் எழுந்துள்ள இச்சிக் கல்க ளைத் தீர்ப்பதற்கு அங்குள்ள தொழிற்சங்கம் தடையாகவுள்ளது.அது மட்டுமன்றி சட்டத்தி லுள்ள ஓட்டைகளும் அடுத்த தடையாகஇருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் வைத்தியசாலையில் வைத்தியர்கள் தாதிமார்களுக்கிடையே பிரச்சினைகள் குறைவதற்கு பதிலாக நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகிறது. இதன் காரணமாக நோயாளிகளே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## பேருந்தில் ரி-56 ரக துப்பாக்கி மீட்பு சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் வண்டியில் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றை முருங்கன் பொலிசார் நேற்று கைப்பற்றியுள்ளார்கள். இது தொடர்பாக பேருந்தில் பயணம் செய்த நபர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் பொலிசாரால் கைது செய் யப்பட்டுள்ளார். அத்துடன் விலட்சிப் பகுதியில் எஸ்.எல்.ஆர்.ரக துப் பாக்கி ஒன்றும் சந்தேக நபர்கள் 5 பேரும் பொலிசாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## மீரிகம பிரதேசத்தில் குழு மோதல் ஒருவர் உயிரிழப்பு ; பலருக்கு காயம்!

(கொழும்பு)

மீரிகம பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் நேற்று முன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளார்கள்.

வர்த்தக நிலைய ஊழியர்களுக்கும் பிரதேச வாசிகளுக்குமிடையே இந்த மோதல் ஏற்பட்டதாக பொலிசார் கூறியுள்ளார்கள். அத்துடன் மோதல் குழுக்களை கலைந்து செல்வதற்கு கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் நேற்று முன் தினம் இரவுவரை இந்த குழுக்கள் கலைந்து செல்லவில்லை என்றும் பொலி சார் மேலும் கூறியுள்ளனர். இதனால் மீரிகம பாதுகாப்புக்காக கம்பஹா பொலிஸ் நிலையத் திலிருந்து மேலதிகப் பொலிசாரும் இராணுவத்தினரும் ஈடுப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

## கைதிகள் பலருக்கு டெங்கு காய்ச்சல்

யாழ்சிறைச்சாலையில் உருவாகியுள்ள சுகாதார சீர்கேடு காரணமாக கைதிகளிடையேடெங்குக் காய்ச்சல் பரவிவருகிறது. தற்பொழுது பெய்து வரும் அடைமழையும் அதனால் ஏற்பட்டுள்ள சுகாதார கவனிப்பின்மையாலும் பரவி வரும் இந் நோயால் இதுவரை 10 பேர் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் ஒருவர் மிகமோசமாகப் பாதிப்புக்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ் சிறைச்சாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

# பாராளுமன்றம் மீண்டும் கூடுவது சந்தேகமே

# இன்று நள்ளிரவு புதிய அறிவிப்புகள் வரலாம்?

(கொழும்பு)

**இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான இழுபறிநிலை நீண்டு செல்வதாலும் இணக்கப்பாடொன்று காணாத நிலையிலும் நாளை பாராளுமன்றம் கூடுமா என்பது சந்தேகத்துக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மீண்டும் ஒருமுறை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவது அல்லது 18ஆம் திகதி நள்ளிரவு முதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப் படலாம் எனவும் சிங்கள வாரஇதழான ராவய தெரிவிக்கின்றது.**

கடந்த 12ஆம் திகதி பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது திறந்த மனதுடன் பிரச்சினைகளுக்குத் தீவு காண்பது பற்றி முயற்சிக்கவில்லை சுமார் இரண்டரை மணி நேரமாக நடந்த பேச்சுக்களில் ஊடகத்துறை கையேற்பு தொடர்பான சனாதிபதியின் நீண்ட விளக்கமளித்தலே இருந்தது. பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்தாலும் பிரதி அமைச்சர் ஒருவர் ஐ.தே.கட்சியிலிருந்து நியமிக்கலாம் என்ற சனாதிபதியின் கருத்தை பிரதமர் நிராகரித்துள்ளார். சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் அதனைப் பொறுப்பேற்குமாறும் பிரதமர் சனாதிபதியைக் கோரிய போது அதற்கு சந்திரிகா சமாதான பதில் எதனையும் தெரிவிக்க வில்லை. சனாதிபதி நல்லிணக்கக் கூட்டணி அரசு பற்றி குறிப்பிட்ட வேளை மக்களால் தெரிவு செய்யப் பட்ட தமது அரசைப் பலப்படுத்திக் கொள்ளவே ரணில் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். மீண்டும் ஒருசுற்றுப் பேச்சு நடத்த தீர்மானிக்கப்பட்டிருப்பினும் அன்று என்ன நடக்கும் என்பது பற்றி கூறமுடியாதுள்ளது.

இந்நிலையில் சனாதிபதிக்கு பெரும்பான்மைப் பலம் இல்லாதிருக்கும் நிலையில் அவருக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் இல்லை. கலைக்க வேண்டுமாயின் அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும் இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

# குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவின் நீதிச்சேவை மற்றும் பொலிஸ் சேவையில் அரசியல்வாதிகளின் தலையீடுகாரண மாக ஊழல் மலிந்து காணப்படுவதாக சர்வதேச மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது என்று சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க கூறியுள்ளார்.

# பிரமந்தனாறு ம.வி.யின் 14ஆம் ஆண்டு நிறைவுவிழா

(கண்டாவளை)

கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனியன்று பாடசாலை முதல்வர்.க.ச.சிவலிங்கம் தலைமையில் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமானது.

நிகழ்வின் மங்கல விளக்கை இப் பாடசாலையை ஆரம்பித்த ஆசிரியர். சு.பொன்னுச்சாமி ஏற்றினார். தொடர்ந்து தலைமையுரை இடம் பெற்றது. அடுத்து ஆசியுரையை இப் பாடசாலையில் இருந்து முதல் முறையாக பல்கலைக்கழகம் சென்ற மாணவி ச.காந்திமதி நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வாக மீனவநடனம், கோலாட்டம், கிராமியநடனம், வில்லிசை, குழுநடனம், காவடி ஆட்டம், கவிதை, பேச்சு என்பன சிறப்பாக இடம்பெற்றன. இறுதியாக பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. நன்றியுரையை உப அதிபர் பரங்குநாதன் நிகழ்த்தினார். (14)

# இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்று பட்டு நெருக்கடிகளைத் தீர்க்க முன்வர வேண்டும்

## இடதுசாரிக் கட்சிகள் வேண்டுகை

(கொழும்பு)

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் தற்போதைய அரசியல் நெருக்கடிகளையும் இனப்பிரச்சினையையும் தீர்த்து வைக்க ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று இரண்டு இடதுசாரிக்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. லங்கா சமசமாசகட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுமே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஏற்பட்ட தகராறு இப்போதுமுழு அரசியல் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. கூட்டு முயற்சி மூலம் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வந்துள்ளோம். எமது கோரிக்கை அலட்சியம் செய்யப்பட்டதே இப்போதைய பிரச்சினைக்குக் காரணமாகும். சனாதிபதி தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க முன்வருமாறு விடுத்த பகிரங்கக் கோரிக்கை ஆக்கபூர்வமானதும் யதார்த்தமானதுமாகும்.

சமாதான நடவடிக்கையிலிருந்து வாபஸ் பெறுவதென பிரதமர் எடுத்த தீர்மானத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இவ்விரு கட்சிகளும் கூறியுள்ளன.

# தபால் சிற்றூழியர்களுக்கு கிளி.யில் பயிற்சி கருத்தரங்கு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட தபால் சிற்றூழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில் காலை.9.30 மணிக்கு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் வீகுமரகுரு தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி என்.ஜெயரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வின் மங்கல விளக்கை வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் வீ.குமரகுரு, வவுனியா அஞ்சல் நுண்ணாய்வுப் பரிசோதகர் கு.ஜெபரத்தினம் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் அஞ்சலுக்கான சவால்களை வெற்றிகொள்வதற்கான அஞ்சலர்களின் பங்களிப்பு என்னும் தலைப்பிலும், வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி பொதுசன தொடர்பும், உயர்வான மனப்பாங்கும் என்னும் தலைப்பிலும், வவுனியா அஞ்சல் நுண்ணாய்வுப் பரிசோதகர் சிறப்புக் கருத்துரையையும், அறிவுரைகளையும் வழங்கினர்.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அதிபர்கள்,உபஅஞ்சல் அதிபர்கள், 150 இற்கு மேற்பட்ட தபால் சிற்றூழியர்களும் கலந்து கொண்டு கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும், அறிவுரைகளையும் செவிமடுத்துப் பயனடைந்தனர். (14)

# அடை மழையை பயன்படுத்தி கூடு பிரித்து கோழிகள் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பகுதியில் அடைமழையைப் பயன்படுத்தி கோழிகள் திருடப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கட்சன் வீதியில் இடம்பெற்றது. மனுவேல்பிள்ளை கிறிஸ்ரி மனுவேல் என்பவருடைய வீட்டிலேயே கோழிக்கூட்டைப் பிரித்து கோழிகள் திருடப்பட்டன. மேற்படி கூட்டில் 13கோழிகள் இருந்த போதிலும் அதில் ஒன்றை மட்டும் விட்டுவிட்டு மற்றைய கோழிகள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது (12)

# சனாதிபதி-பிரதமர் கருத்து வேறுபாடு பேச்சுக்கள் மூலம் தீர்க்கவேண்டும்

## - மக்கள் உரிமை பாதுகாப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான கருத்து வேறுபாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்குமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் மக்கள் உரிமைப் பாதுகாப்புச்சபை என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது. இதை மேற்கொண்டு செல்ல நான்கு முனை அணுகு முறையைக் கையாள வேண்டும்.

01.வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தெரிவித்த யோசனைகளை ஆராய்தல்.

02.தமிழ் மக்களின் அபிலாசைகள் பாதிக்கப்படாத வகையில்வட கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் சிங்கள மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் தீர்வொன் றைக் காண்பதற்கு முயற்சியெடுத்தல்.

3. அரசியல் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணய சபையை அமைத்து புதிய அரசியல் யாப்பு நகலும் புதிய தேர்தல் முறைபற்றிய நகலும் தயாரிக்கப்படவேண்டும்.

4. புதிய அரசியல் யாப்பு மற்றும் இனப்பிரச்சினைத் தீவு தொடர்பான சிபார்சுகளை பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடுதல். போன்ற நான்கு அணுகுமுறைகளையே கையாளுமாறு இந்த அமைப்புக் கேட்டுள்ளது.

# மாவீரர் நாள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர், கூட்டுறவு நிறுவனங்கள், கமக்கார அமைப்பு, மாதர் சங்கங்கள் மற்றும் அனைத்துப் பொது அமைப்புக்களுக்குமான மாவீரர் நாள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் த.தர்மேந்திரன் தலைமையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

மக்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் பிரதேசத்தில் எழுச்சியாகக் கொண்டாடுவது தொடர்பாகவும் துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினார். மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா மாவீரர்களின் தியாகம் மற்றும் களமுனைகளில் போராளிகளின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடு தொடர்பாகக் கருத்துரை வழங்கினார். (24)

# சந்திரிகா நாளையதினம் பாராளுமன்றத்தில் தனது நிலைப்பாட்டை விளக்கவேண்டும்

## அமைச்சர் ராஜிதசேனாரட்ண

(கொழும்பு)

எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு நடைபெறும் போது சனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெளிவாக அறிவிக்க வேண்டும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததற்கான காரணம் இதன்போது சனாதிபதி எதிர்பார்த்த விடயங்கள் என்பன குறிப்பிடப்பட்டு சனாதிபதி உரையாற்ற வேண்டும். இந்த விடயத்தில் ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரு கூட்டமைப்பை மேற்கொள்ளப் போகிறதா? அதனடிப்படையில் எதிர்காலத்தில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதா? அல்லது தேசிய அரசாங்கம் ஒன்றுக்கு வாய்ப்புக் கொடுக்க போகின்றாரா? என்பது தொடர்பாகவும் தெளிவாகச் சொல்ல வேண்டும். அவ்வாறான தொரு நிலை ஏற்படுமாக இருந்தால்தான் எதிர்காலச் சமாதான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு செல்வதா? அல்லது பொ. ஐ. முன்னணி கொண்டு செல்வதா? அல்லது தேசிய அரசாங்கத்துக்கூடாக முன்கொண்டு செல்வதா? இல்லையெனில் ஒரு பொதுத் தேர்தலை எதிர்நோக்குவதா? என்பது பாராளுமன்றத்திற்கும், பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (32)

# யாழ். இல் உ.பா. வலயத்தினால் 88 பாடசாலைகள் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 495 வரையான பாடசாலைகள் அமைந்துள்ள போதும் தற்பொழுது 407 பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருவதாக யாழ். வலயக் கல்விப் பணிமனை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய 88 பாடசாலைகளும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய நடைமுறையால் இயங்காதிருப்பதுடன் இதில் 22 பாடசாலைகள் மட்டும் வேறு பாடசாலைகளுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான ராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் 65ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தம் சொந்த இடங்களிலுள்ள பாடசாலைகளில் கற்கமுடியாது பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான பாதிப்புக்களால் 50%மான மாணவர்கள் தம் கல்வியைத் தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.(33)

# நோர்வேயின் நடவடிக்கை சந்தர்ப்பவாதமென்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர் நிலையில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளது சந்தர்ப்பவாதம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சனாதிபதி சந்திரிகா எடுத்தமுடிவும் சந்தர்ப்ப வாதம் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலைக்கு வேண்டியது பிரதமரின் பொறுப்பிலேயே தங்கியுள்ளது எனக் குறிப்பிட்டார். (32)

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கௌரவிப்பு நிகழ்வில் மாவீரர் குடும்பத்தவர்களாகவும் அதே வேளை கூட்டுறவுப் பணியாளர்களாகவும் இருக்கும் நூற்றுக் கணக்கான பெற்றோர்கள் கௌரவிக்கப்படுவர்.

இக் கௌரவிப்பு நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பல முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொள்ள வுள்ளனர். (33)



### சிந்தனைக்கு

விடுதலைப்புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல, விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள் தான் மக்கள்; மக்கள்தான் புலிகள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 18-11-2003

## இரு துருவங்களாக...!

சிறிலங்கா அரசியலில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி திடீர் இடைக்காலத்தேர்தல் ஒன்றிற்கு இட்டுச்செல்லுமா? என்பதே இன்று அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ள பிரதான கேள்விஆகும். ஏனெனில், தற்போதைய சூழ் நிலையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் நிலையில் இரண்டு பிரதான கட்சிகளும் செயற்படுவதாகத் தெரியவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்தெடுத்த சனாதிபதி சந்திரிகா, அவ்வமைச்சுக்களை எந்த நிலையிலும் திருப்பி ஒப்படைக்கப்போவதில்லை எனக் கூறிவிட்டார். அது மட்டுமல்ல; பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையின் கீழ் ஒப்படைக்க சனாதிபதி தயாராக உள்ளார் என வெளியாகிய செய்திகளையும் அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இதேவேளை முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தில் போரை முன்னெடுப்பதில் தீவிரபங்காற்றியவருமான ஜெனரல் அனுருத்தரத்வத்த மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் போன்று நடந்து கொள்ளத் தொடங்கி விட்டார். போன்று உள்ளது. ஏனெனில் அவர் ஏற்கனவே படை அதிகாரிகளைச் சந்தித்து கள் நிலவரம் பற்றி அறியத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்த சனாதிபதி சந்திரிகா தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை உருவாக்க வருமாறு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணியிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கு இது அவசியமானதாகும் என்பது அவர் இதற்குக் கொடுக்கும் விளக்கம் ஆகும்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ பறிக்கப்பட்ட அமைச்சுக்கள் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் திருப்பிஒப்படைக்கப்படாதவரையில், சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடரப்படமுடியாது எனத் தெரிவித்து ஒதுங்கிக்கொண்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா, யுத்தநிறுத்த உடன்பாடு கடைப்பிடிக்கப்படும். யுத்த நிறுத்தக் கண்காணிப்பு தொடர்ந்து செயற்படும் என உறுதிகூறியதோடு, சமாதான முயற்சிகளைத் தொடருமாறு ரணில்விக்கிரமசிங்க அதற்குச் செவிசாய்க்கத் தயாராக இல்லை. அமைச்சுக்கள் மீளஒப்படைக்காத வரையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பதற்கோ ஒத்துழைப்பு என்பதற்கோ இடமில்லை. என்பதே அவரது நிலைப்பாடாகவுள்ளது.

இந் நிலைப்பாடு காரணமாக சனாதிபதி சந்திரிகாவின் தேசிய அரசு தொடர்பான கோரிக்கைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் தனது ஆட்சி அதிகாரத்தை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. இந்த வகையில் இருதரப்பிற்கும் இடையிலான முரண்பாடு விட்டுக்கொடுப்புக்கள் ஏதுமற்றதாகத் தொடர்ந்து செல்வதாகவே உள்ளது. அதாவது இருதரப்பும் இருதுருவங்களாகச் செயற்பட்டுவருகின்றன.

இது மாத்திரமின்றி ஒருதரப்பினரிடம் உள்ள அதிகாரங்களைப் பறித்தெடுத்தல் அன்றி பதவி இறக்குதல் என்பனவற்றிலேயே இருதரப்பும் அக்கறை செலுத்திவருகின்றன. எடுத்துக்காட்டாக சனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல், அன்றி சனாதிபதியிடம் உள்ள அமைச்சுக்களுக்கான நிதியை வெட்டுச் செய்தல் போன்றவை குறித்து ரணில் அரசாங்கம் யோசித்து வருகையில் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுதல் என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா சிந்தித்துவருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, இருதலைவர்களும் விட்டுக்கொடுப்புடன் செயற்படுமாறும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறும்உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் அரசியல் இராஜதந்திர ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றது ஆயினும் எவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. விட்டுக்கொடுத்தல் என்பது இறங்கிப் போதல் என்ற ரீதியில் அதாவது தமது சுய கௌரவத்தில் பாதிப்புக்கள் விளைவிக்கும் என்ற நிலைப்பாட்டினை இருதரப்பும் கொண்டுள்ளதாக எண்ணவைக்கின்றது.

இந்நிலையில்தான் அதாவது இத்தகைய முரண்பாட்டபோக்குத்தான் திடீர் இடைக்காலத் தேர்தல் ஒன்றிற்கு இட்டுச்செல்லுமா? என்ற கேள்வியை பரவலாக எழவைத்துள்ளது. இடைக்காலத் தேர்தல் ஒன்று பிரதான கட்சிகளுக்கு அதிலும் குறிப்பாக பொ.ஐ.முன்னணிக்கு இலாபகரமானதாக இருப்பதற்கானவாய்ப்புக் குறைவாக இருப்பதே நிலைமைஇது வரையில் தேர்தல் வரையில் செல்லாமல் இருப்பதற்குக் காரணமாகும். ஆனால் இருதரப்பிற்கும் இடையிலான முரண்பாடு விரைவில் தீர்க்கப்படாதுபோனால் இடைக்காலத்தேர்தல் ஒன்றிற்கு நாடு செல்வது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். ஆனால், இத்தேர்தல் கூட நெருக்கடிக்குத் தீர்வாக அமையுமா என்பது கேள்விக்குரியதே ஏனெனில், சிறிலங்கா அரசியல்யாப்பு குறிப்பாக விகிதாசாரத் தேர்தல்முறை தேர்தலின் முடிவைப்பாரிய அளவில் மாற்றியமைக்க இடமளிக்கமாட்டாது.

## அரசியல் கொந்தளிப்பு நிலையைத் தணிக்க சனாதிபதி இன்று பிரதமருடன் சந்திப்பு!

### - சில முடிவுகள் எட்டப்படலாம்

சனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுக்களையும் சுவீகரித்ததையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு சனாதிபதியினதும்- பிரதமரினதும் தலைமையில் இன்று நடைபெறும் பேச்சுக்களின் பின்னர் சுமுகநிலைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதிய பேச்சுக்களின் முடிவின்படி இன்று இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின் போது சனாதிபதி சுவீகரித்துள்ள பாதுகாப்பு அமைச்சு பிரான்ஸ் நாட்டில் நிலவுவது போன்று சனாதிபதி தலைமையிலான பாதுகாப்புச் சபை ஒன்றை உருவாக்கும் யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இந்த சபை சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் சேர்ந்த சபையாக இருக்கும் எனவும் எந்த விதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் முத்தரப்பினரின் உடன்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலேயே இருக்கும் என்பது சபையின் விசேட அம்சமாகும். இது பிரான்ஸ் நாட்டில் நிலவும் முறையாகும்.

இப்பிரேரணை சனாதிபதியின் செயலர் கருணாரத்னவினதும் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனினதும் ரகசியப் பேச்சுக்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

இவ் யோசனைகளில் மற்றும் ஒன்றான 10 அமைச்சுக்களைப் பொறுப்பேற்று தேசிய நல்லிணக்க அரசை ஏற்படுத்துவது என்பதை ரணில் மறுத்துள்ளார்.

இது தொடர்பாகத் தமது கட்சி உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் பிரதமர் கலந்தாலோசித்துள்ளார்.

## நாடு நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது பலப்பரீட்சை நடத்தும் நேரம் இதுவல்ல

### - அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

(கொழும்பு)

நாடு நெருக்கடி நிலையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கையில் அரசியல் பலப் பரீட்சை நடத்த முற்படுவது பொருத்தப்பாடுடையது அல்ல என கல்வியமைச்சர் கருணாசேனகொடித்துவக்கு கூறியுள்ளார்.

இன்றைய நிலையில் அரசியல் ஸ்திர நிலைமையே இருக்க வேண்டியதும் மிக அவசியமானதும் ஆகும் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலம் தற்போது ஒரு பெண்ணின் கையிலேயே தங்கியுள்ளது. எனினும் தமது அரசாங்கம் மக்கள் ஆணையின் படியே பதவிக்கு வந்ததால் பிரதமரும் ஆளும் கட்சியினரும் சனநாயக . ரீதியிலான எந்தவொரு முடிவிற்கும் தலைசாய்த்து விடத் தயாராக இருப்பதாகவும் கூறிய அவர், சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ் வேளையில் இத்தகைய பலப் பரீட்சை நடத்தப்படுவது உசிதமற்றது என்றும் அவ்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அழகியல் கலையில் பரிசில்களை வழங்கும் பாடசாலை வைபவமொன்றிலேயே கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

## தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சனாதிபதியை விட்டு பிரியமாட்டேன்

### -ரிச்சர்ட் பத்திரன அறிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தான் சனாதிபதியை விட்டுப் பிரியப் போவதில்லை என பொ.ஐ.மு. எம்.பியான ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் தென்மாகாண முதலமைச்சர் சிறிசேனவை சந்தித்து நடத்திய உரையாடலின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், தான் எந்தக் கட்சிப் பேதமுமின்றி சனாதிபதிக்குப் பூரண ஆதரவை வழங்குவதாகவும், கருத்து முரண்பாடு கொண்டுள்ள ஏனைய எம்.பிக்களோடு சுமுக பேச்சுக்கள் நடத்தி அவர்களையும் சனாதிபதிக்கு ஆதரவு வழங்கக் கோருவதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

விசேடமாக ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே, பௌசி ஆகியோருடன் பேச்சு நடத்தி தற்போதைய சூழ்நிலையில் அவர்களின் ஆதரவைப் பெறுவதாகவும் அவர் முதலமைச்சர் சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.

## சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகாதீர் பிரதமருக்கு தேசிய மகாசங்கம் வேண்டுகை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகிவிட வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தேசிய மகா சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. நாட்டின் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளிலிருந்து பிரதமர் விலகிக் கொள்ளக் கூடாது என தேசிய மகா சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமாதான முயற்சிகளில் இருந்து எந்தவொரு கட்டத்திலும் பிரதமர் விலகுவது பிரதமருக்கு ஏற்புடையது அல்ல என்றும் மகா சங்க அறிக்கை கூறுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கான தனது பங்களிப்பை செயற்படுத்துவது மிக அவசியமானது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகள் முன் வைத்துள்ள வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைவு குறித்து அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப் பாட்டைப் பிரதமர் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் மகா சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப்புலிகளின் இடைக்கால வரைவின் ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் இச்சங்கம் கேட்டுள்ளது

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இவ் யோசனைகள் மக்கள் முன்வழங்கப்பட வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளின் இந்த யோசனைகள் ஏற்புடையது தானா என்பதை உயர் நீதிமன்றத்திடம் இருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சிம்பாவ்வே அணியுடனான டெஸ்ட் தொடரை மேற்கிந்திய அணி வென்றது

### - லாறா ஆட்டநாயகனாகத் தெரிவு

சிம்பாவ்வே அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணி 128 ஓட்டங்களால் வெற்றிப் பெற்றுள்ளது . இதன் மூலம் இரு போட்டிகள் கொண்ட இத்தொடரில் மேற்கிந்தியர்கள் அணி 1-0 என்ற நிலையில் டெஸ்ட் தொடரைக் கைப் பற்றியுள்ளது சிம்பாவ்வேயின் புலவாயோ நகரில் நடைபெற்ற இப் போட்டியில் மேற்கிந்தியதீவு அணி முதல் இனிங்சில் 481 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 128 ஓட்டங்களை பெற்றது. சிம்பாவ்வே அணி முதல் இனிங்சில் 377 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 104 ஓட்டங்களையும் பெற்றது.

இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரையன் லாறா தெரிவானார். இவர் இப் போட்டியின் முதல் இனிங்சில் 191 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு அணிகளும் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித்தொடரிலும் மோதவுள்ளன. முதலாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 22 ஆம்திகதி ஆரம்பமாக உள்ளது.

## அவுஸ். செல்லும் இந்திய கிரிக்கெட் அணி அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

அங்கு நான்கு டெஸ்ட் போட்டிகளில் அது அவுஸ்திரேலிய அணியுடன் விளையாடும்.

இதற்கென 16 உறுப்பினர்கள் கொண்ட இந்திய டெஸ்ட் அணி வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:-

சௌரவ் கங்குலி(தலைவர்), ஆகாஷ் சோப்ரா,வீரேந்திரா சேவாக்,வி.வி.எஸ்.லஷ்மன், ராகுல்ராவிட், சச்சின் டெண்டுல்கர், பார்த்தீவ் பட்டேல், ஹர்பஜன் சிங், அனில் கும்ப்ளே, சஹீர்கான், ஆஷிஸ், நெஹ்ரா, அஜித் அகர்கர், சடகோபன், ரமேஷ், அவிஸ்கர் சால்வி, தீப் தாஸ் குப்தா, இர்பான் பதான்.

# பெரும்பான்மைக் கட்சிகள் இணைந்தால் எமக்கு என்ன ஏற்படுமோ என ஏன் சிந்திக்கக்கூடாது?

## அமைச்சர் தொண்டமான் கேள்வி

(லண்டன்)

பெரும்பான்மை அரசாங்கத்தால் சிறுபான்மையினர் என்ன பாடுபட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, இரு கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்தால் என்ன விளைவு ஏற்படுமோ என நாம ஏன் சிந்திக்கக் கூடாது? என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் இவ்வாறு கேட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கேள்வி:- பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்று சேர்வது என்பது சிறுபான்மை மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதாக அமையும் என்று நீங்கள் ஏன் அச்சப்படுகிறீர்கள் ஒரு வேளை அது இனப்பிரச்சினைக்கு பெரும்பான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றாக இணைந்து ஒரு நல்ல தீர்வை எடுப்பதற்கு வாய்ப்பாக அமையுமல்லவா?

பதில்:- இனப்பிரச்சினையை எடுத்துப் பார்த்தால் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றரை வருடமாக நடைபெற்றவேளை அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளதன் மூலம் அவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். உண்மையானவர்களாக இருந்தால் இந்த சமாதானப் பேச்சில் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுத்து தொடர்ந்து பேச்சை முன்னெடுத்துச் சென்றிருக்கலாம். முழு நிலைமையும் ஒரு இக்கட்டான நிலைக்கு வரக் காரணம் சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பறித்ததினாலேயே.

கேள்வி:- இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கம அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அப்படியொரு வாய்ப்பை தேசிய அரசாங்கம் ஏற்படுத்தித் தருமென நீங்கள் நினைக்கவில்லையா? நடக்காது என்று ஏன் நினைக்கிறீர்கள்?

பதில்:- சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை அரசாங்கத்தால் என்ன பாடுபடுத்தப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால், இரு கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்தால் இன்னும் என்னென்ன ஆகக்கூடாத விளைவுகள் ஆகலாம் என ஏன் நினைக்கக் கூடாது.

கேள்வி:- தற்போது நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு இல்லாத நிலையில் இடைக்கால நிர்வாகம் போன்ற விடயங்களை அமுல்படுத்த வேண்டுமானால் அந்த அறுதிப் பெரும்பான்மை போதாது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்கின்ற நிலையில் இந்த மாதிரியானதொரு யோசனை யதார்த்த ரீதியாக ஒரு பயனுள்ள யோசனையாக இருக்காதா?

பதில்:- மூன்றில் இரண்டு தேவை என்பது உண்மைதான். பேச்சுவார்த்தை நடத்தி அது ஒரு முடிவுக்கு வருவதற்கு முதல் இவ்வாறு நடந்து கொள்வது தவறு. பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வந்ததன் பின்னர் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அவர்கள் முடிவு செய்யலாம். அது சரியா பிழையா என்று அதற்காக இப்பொழுது எங்களை அடைவு வைக்க முடியுமா?

## மாங்குளம் முகாம் தகர்ப்பு

# வெற்றி விழா நிகழ்வும் போர்க் திருவுருவச்சிலை திறப்பும்

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் இராணுவ முகாமைத் தாக்கி அழித்த 13வது ஆண்டு வெற்றிவிழாவும் கரும்புலிலெப்.கேணல் போர்க்கின் உருவச்சிலை திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

1990ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 23ஆம் திகதி மாங்குளம் முகாமை தகர்த்தழித்ததை நினைவுகூர்தலுடன் மாவீரர் கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் திருவுருவச்சிலை திறப்புவிழாவும் எதிர்வரும் 23.11.2003 அன்று ஞாயிற்றுக்கிழமை விசேடமாக நடைபெறவுள்ளது. இரவு கலை நிகழ்வில் மகளிர் இசைக் குழுவினரின் இசை நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதுடன் பல கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (05)

# பன்றிக் கூட்டமொன்றுமுற்றாக பரந்தனில் கிணற்றில் வீழ்ந்தது

பரந்தன் சந்திப்பகுதியிலுள்ள கிணறொன்றினுள் நேற்று பன்றிக்கூட்டமொன்று வீழ்ந்து அக்கூட்டத்திலிருந்த அனைத்துப்பன்றிகளும் இறந்துள்ளன.

பரந்தன் சந்திக்கு அருகிலுள்ள வயற்பகுதியில் காணப்பட்ட இப் பன்றிக்கூட்டம் ஏ-9 வீதியைக் கடக்க முற்பட்டபோது மக்களைக் கண்டதும் மிரண்டு ஓடியுள்ளது. இவ்வாறு ஓடிய பன்றிக்கூட்டத்திலிருந்த 16பன்றிகளும் அப்பகுதியிலுள்ள கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கதலைமைப் பணிமனை வளாகத்தில் இருந்த நிலமட்டக்கிணற்றினுள் வீழ்ந்தன. இதனையடுத்து அப்பகுதிக்கு வந்த மக்கள் தடிகளால் அவற்றை அடித்துக்கொன்று உணவுக்கென எடுத்துச் சென்றனர். (14)

# யாழ். சிறையிலுள்ள வன்னி இளைஞன் குறித்து பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப் பணிப்பு

கடந்த இரண்டு மாத காலப் பகுதிக்கு மேலாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதி இளைஞன் ஒருவர் தொடர்பாக அவரது பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்க சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நாகர்கோவில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள 10ஆவது சிங்க ரெஜிமென்ட் படைத்தளத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் இவ்விளைஞன் கைது செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் உழவனூர் பகுதியைச் சேர்ந்த ராசன் எனப்படும் மகாலிங்கம் இரத்தினராசா (வயது-30) என்னும் இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளவரெனத் தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சுண்டிக்குளம் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த குறித்த இளைஞன், வழி தவறி நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் பிரவேசித்தவேளை, படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் கொடிகாமம் பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட இவர் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்தே இவ் இளைஞனது நிலை தொடர்பாக அவரது பெற்றோருக்கு அறிவிக்க நீதிமன்ற பதிவாளருக்கு நீதவான் பா. சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே குறித்த நாகர்கோவில் பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றஞ்சாட்டி, பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஜெயதாசன் செல்வராசா எனும் பொதுமகனும் அண்மையில் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தேசிய அரசு நிறுவச் சந்தர்ப்பம்

## சனாதிபதி செயலகம் தெரிவிப்பு

இலங்கையில் நீடித்து வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் வகையில் தேசிய அரசு ஒன்றை நிறுவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சனாதிபதி செயலகம் இது தொடர்பில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தி, சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் முகமாகவே சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார். பொதுமக்கள் அமைப்புகளும், ஏனைய அமைப்புகளும் நாட்டின் இனப்பிரச் சினை உட்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றையே விரும்புகின்றனர். எனவே அதனை சனாதிபதி தற்சமயம் நிறைவேற்றியுள்ளார். இலங்கையின் அரசியலமைப்பு (நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக) திருத்தி அமைக்கப்பட வேண்டியது அவசியம். அதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. இந்நிலையில் பல கட்சிகள் அமைந்த தேசிய அரசாங்கத்தின் மூலமே அதனை நிறைவேற்ற முடியும் என்பதையும் சனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த சில நாட்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய முறையில் கடைப்பிடிப்பது குறித்தும் இந்த அறிக்கையில் வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சமாதான...

வில்லை.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ் அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக பேச்சுக்கள் நடத்தத்தயாராக இருக்கிறது என கூறியுள்ளார்.

இந்தப்பிரச்சினையைத்தீர்க்காமல் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல இயலாது. இது தொடர்பாகஅரசாங்கம் பிரான்ஸ் அமைப்பு முறை ஒன்று பற்றி கவனம் செலுத்துகிறது. இதன் பிரகாரம் பாதுகாப்புத்துறை கட்டுப்பாடு பிரிக்கப்பட்டு பிரதமருக்கும் சனாதிபதிக்கும் பகிர்ந்தளிக்கப்படும். சனாதிபதியுடன் இவ்வாரம் இடம்பெறவிருக்கும் பேச்சுக்களின் போது அரசியல் நெருக்கடி தீர்த்து வைக்கப்படும்.

பொதுத்தேர்தல் ஒன்றுக்கு இட்டுச்செல்லும் வகையில் நெருக்கடியை உருவாக்க அரசாங்கம் விரும்பவில்லை. என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசை அமைத்து அதில் அதிகமானோருக்கு அமைச்சு பதவிகள் கொடுப்பதனால் நடைமுறை இனப்பிரச்சினையை தீர்த்துவிடமுடியாது. நோர்வே ஏற்பாட்டாளர்கள் தென்னிலங்கையில் அரசாங்கத்தின் உறுதித்தன்மையில்லாத நிலையில், தற்காலிகமாக விலகிச்சென்றுள்ளனர். அவர்கள் விலகிச்செல்வதை எவராலும் குறைகூறமுடியாது.தமது ஏற்பாட்டு நடவடிக்கைக்கு பொறுப்பேற்ககூடிய ஒரு அரசாங்கம் இல்லாத போது அவர்களால் தொடர்ந்தும் செயற்படமுடியாமல் போனது.

சனாதிபதியின் தேசிய அரசு நிலைப்பாட்டில் தெளிவின்மை காணப்படுகிறது. சனாதிபதியின் தேசிய அரசின் நோக்கம் எதுவும் இல்லை. அது அதிகாரக் கைப்பற்றல் அடிப்படையில் மாத்திரமே கொண்டுவரப்பட்டுள்ளது. சமாதானமுனைப்புக்கள் ஸ்தபித்துள்ள இந்நிலையில் நாட்டில் இன்று பயமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

### தெல்லிப்பளை...

பிரதேசத்துள் பிரவேசிப்பதற்காக படையினரால் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடியில் வைத்து தடுத்து நிறுத்தி சோதனை செய்த படையினர் அவர்களை உட்செல்லவிடுவதற்கான அனுமதியை மறுத்ததைத் தொடர்ந்து தாம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் நலன்பேணும் அமைப்பு பிரதிநிதிகள் எனவும் இனம் காட்டியும் உட்செல்ல அனுமதிக்காத படையினர் அவர்களை இவ்வாறு திருப்பி அனுப்பினர்.

இதனையடுத்து நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவால் தன் அரசியல் கௌரவம், அரசியல்உரிமை என்பன பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் படையினர் அதற்கு தடை விதித்த தன்மையானது ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் தொடர்பாக சுட்டிக்காட்டிய கடிதங்களை சனாதிபதி,பிரதமர், பாதுகாப்பு அமைச்சு ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார். (33,27)

# சரும நோய் சிகிச்சை

சரும நோய்க்கான (தோல் நோய்) சிகிச்சை (கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்) மாதா மாதம் 1ஆம்,3ஆம், 4ஆம், சனிக்கிழமைகளில் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துக்கொள்கிறார்.

### வரவு-...

களுக்கு வேதன உயர்வு, விவசாயிகளுக்கு மானியம் மற்றும் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு சலுகைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார். நேற்று வரவு-செலவுத் திட்டத்தை படி முறைப்படுத்தும் இறுதி நிகழ்வு நிதியமைச்சில் இடம் பெற்றது. (32)

### ஜே.வி.பி...

கொடுத்துள்ளதோடு ஜே.வி.பி. யுடன் கூட்டணி இல்லாத நிலையில் தேர்தல் ஒன்றில் நிற்கத் தாம் தயாரில்லையென்றும் கூறியுள்ளார்.

அத்துடன் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைக்காவிட்டால் கூட்டணிக்கு எதிராக உள்ள மத்தியகுழு உறுப்பினர்களின் உண்மையான முகத்தை மக்கள் முன்கொண்டுவரப்போவதாகவும் கூட்டணி அமைக்காவிட்டால் தேர்தலில் சி.சு.கட்சி படுதோல்வியைச் சந்திக்கவேண்டிவரும் என்றும் அநுராபண்டாரநாயக்க கூறியுள்ளார்.

இந்த வாதப்பிரதிவாதங்களின் பின்வரும் 25ஆம்திகதிக்கு முன்னர் ஜே.வி.பி.யுடன் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (32)

# பகிரங்க விவாதத்திற்கு வருமாறு பீரிஸிற்கு மங்கள சமரவீர அழைப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர தம்முடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் ஜீ.எல். பீரிஸிற்கு அழைப்பு விடுத்துள்ளார். விடுதலைப்புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சிச்சபை தொடர்பான யோசனைகள் குறித்தே விவாதம் நடாத்த வருமாறு பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிற்கு சமரவீர கடிதம் அனுப்பியுள்ளார். அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் என்ற ரீதியில் அழைப்பு விடுத்ததாக சமரவீர தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நடாத்திய பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக அரசாங்கம் எதையும் இதுவரை வெளியிடவில்லையென சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

### நோர்வே...

எனக் கேட்டீர்களா எனக் கேட்ட போது இலங்கையின் அமைதி வழிமுறையில் இந்தியாவுக்கு மிக முக்கிய பங்குண்டு என்பது உண்மைதான் ஆனால் தான் எப்படி செயற்படவேண்டும். என்பது பற்றி இந்தியாவுக்கு நன்கு தெரியும் அதை நாங்கள் வெளிப்படையாக சொல்லத்தேவையில்லை நோர்வே தூரத்திலுள்ள சிறிய நாடு இந்தியா என்ன செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லத்தேவையில்லை இலங்கை அமைதி வழிமுறைக்கு இந்தியா தொடக்கத்திலிருந்தே ஆதரவு அளித்து வந்திருக்கின்றது. அதற்கு நன்றி செலுத்துகிறோம் என நோர்வே பிரதிநிதி எரிக் சூல்கெய்ம் தெரிவித்தார்.

### காட்டுக்குத்...

கரடியுடன் மேற்படி நபர் போராடியபொழுது கரடி நபரின் ஒற்றை கண்ணை பிடுங்கியுள்ளதுடன் மற்றைய கண்ணையும் சேதப்படுத்திவிட்டு காட்டிற்குள் ஓடிவிட்டது.

காட்டிற்குள் வேட்டைக்குச் சென்றவர்கள் திரும்பிவருகையில் மேற்படி நபரின் அவலக்குரலைக்கேட்டு அவ்விடத்திற்குச் சென்ற போது நபர் கரடியினால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளான நிலையில் இருந்ததைக் கண்டு உடன் சிகிச்சையின் பொருட்டு கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார்.

அங்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மேலதிக சிகிச்சை பெறும் பொருட்டு நேற்று மாலை கிளி. மாவட்ட அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

ஒட்டுசுட்டான் மேழிவனம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது-52) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.